Christian Network
TO END DOMESTIC ABUSE

# குடும்பத்திற்குள் நிகழக்கூடிய துஷ்பிரயோகத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான உறவுகள் குறித்தான வேதாகம கண்ணோட்டம்



Christian Network
TO END DOMESTIC ABUSE

# குடும்பத்திற்குள் நிகழக்கூடிய துஷ்பிரயோகத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான உறவுகள் குறித்தான வேதாகம கண்ணோட்டம்



## A Biblical View of Relationships to End Domestic Abuse

2025

A Biblical View of Relationships to End Domestic Abuse
Copyright 2020, Christian Network to End Domestic Abuse.
குடும்பத்திற்குள் நிகழக்கூடிய துஷ்பிரயோகத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்கான உறவுகள் குறித்தான வேதாகம கண்ணோட்டம்
பதிப்புரிமை 2020, குடும்பத்திற்குள் நிகழக்கூடிய துஷ்பிரயோகத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான கிறிஸ்தவ வலையமைப்பு.

Edited and revised 2020 by Amanda Jackson, Director, Women's Commission, World Evangelical Alliance.
மகளிர் ஆணைய உலக சுவிசேஷ கூட்டணியின் இயக்குநர் அமண்டா ஜாக்சன் அவர்களால் 2020-ல் திருத்திய பதிப்பு

© 2025 தமிழ் மொழிபெயர்ப்பு கொழும்பு இறையியல் கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்டது

This booklet has been produced by the Christian Network to End Domestic Abuse.

*We thank the original contributors to this Biblical Framework, a team of twenty women from across the globe who formed the taskforce on domestic abuse of the Women's Commission of the World Evangelical Alliance (named the World Evangelical Federation). They framed the document as a first priority in understanding and dealing with "the immense and sinful problem of abuse".*

குடும்பத்திற்குள் நிகழக்கூடிய துஷ்பிரயோகத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான கிறிஸ்தவ வலையமைப்பால் இந்த சிற்றேடு தயாரிக்கப்பட்டது.

*இந்த வேதாகம கட்டமைப்பிற்கு முதல் பங்காளிகளாக உலகம் முழுவதிலுமுள்ள இருபது பெண்களை கொண்ட குழுவிற்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றோம். அவர்கள் உலக சுவிசேஷ கூட்டணி (இப்போது உலக சுவிசேஷ கூட்டமைப்பு என்று அழைக்கப்படும்) பெண்கள் ஆணையத்தின் கீழ், குடும்பத்திற்குள் நிகழும் துஷ்பிரயோகம் தொடர்பிலான ஒரு பணிக்குழுவை உருவாக்கினர். துஷ்பிரயோகத்தின் தீவிரமான மற்றும் பாவகரமான பிரச்சினையை புரிந்துகொள்ளவும், அதை நிவர்த்தி செய்யவும் உதவும் வகையில், இப்பெண்கள் இணைந்து இந்த ஆவணத்தை முதன்மையான முன்னுரிமையாக உருவாக்கினர்.*

restored-uk.org
evoj.org

ISBN: 978-624-5570-24-9
Printed by: Impressions Printers, Tel: 0777802798

CTS Publishing
Colombo Theological Seminary
189, Dutugemunu Street, Kohuwela, Sri Lanka.
http://www.cts.lk

# அறிமுகம்

**உலகளாவிய ரீதியில் குடும்பத்திற்குள் நிகழக்கூடிய துஷ்பிரயோக சம்பவங்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது, கொவிட்-19 தொற்றுநோய் ஏற்படுத்திய ஒரு துரதிர்ஷ்டவசமான விளைவு என்று கூறலாம். நாட்டை முடக்கும்படியான உத்தரவானது குற்றவாளிகள் தங்களால் பாதிக்கப்பட்டவர்களை 24 மணி நேரமும் தொடர்ந்து அணுக அனுமதித்துள்ளது. இதற்கிடையில், பாதிக்கப்பட்டவர்கள்-பெரும்பாலும் பெண்கள் மற்றும் குழந்தைகளாவர்-அவர்களே இதில் தப்பிக்க வழியின்றி சிக்கிக்கொள்கிறார்கள்.**

*ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் இதை "உலகளாவிய அளவில் குடும்ப வன்முறையில் இது அதிர்ச்சியூட்டும் ஓர் அதிகரிப்பு" என்று குறிப்பிட்டுள்ளார்.*[1]

இந்த நிகழ்வுகளின் அதிகரிப்பும்,[2] இந்த பிரச்சினை குறித்த அதிகரித்த அறிக்கைகளும், திருச்சபை சமூகங்களுக்குள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு விவாதங்களை தூண்டியுள்ளன.[3]

குடும்பங்களில் நிகழக்கூடிய துஷ்பிரயோகம் மற்றும் வேதனைக்கு கிறிஸ்தவர்கள் எவ்வாறு மாறுத்தரம் அளிக்க வேண்டும்? துஷ்பிரயோக உறவுகளில் சிக்கியிருக்கக்கூடிய பெண்கள் மற்றும் ஆண்களுக்கு அவர்கள் எவ்வாறு ஆலோசனை வழங்க வேண்டும்?

இந்த சிற்றேடானது ஆரோக்கியமான உறவுகள் மற்றும் துஷ்பிரயோகத்தை தடுப்பது பற்றி வேதாகமம் என்ன கற்பிக்கிறது என்பதை புரிந்துகொள்ள நமக்கு உதவுவதை நோக்கமாக கொண்டுள்ளது. அத்தோடு உள்ளூர் திருச்சபை தலைவர்கள் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கும், அன்பான உறவுகளை உறுதிப்படுத்தவும், துஷ்பிரயோக சம்பவங்களுக்கு

1. 1997 ஆம் ஆண்டிலேயே, உலக சுவிசேஷ கூட்டணி பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான துஷ்பிரயோக மீறலின் தீவிரத்தையும் அதன் பாவத்தன்மையையும் ஒப்புக்கொண்டது. 2020 ஆம் ஆண்டில், போப் பிரான்சிஸ் அனைத்து திருச்சபைகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக நிற்குமாறு வலியுறுத்தினார், "சில நேரங்களில் பெண்கள் சகவாழ்வில் தாங்கள் சுமக்கும் உறவில் வன்முறைக்கு ஆளாக நேரிடும், அது மிகவும் கனமான சுமையைப்போல இருக்கும்" என்று கூறினார். (ராய்ட்டர்ஸ், 13-04-2020).

2. அவுஸ்திரேலியாவில், வீட்டு வன்முறை தொடர்பான உதவிக்கான கூகுள் தேடல்கள் 75% அதிகரித்துள்ளன. சைப்ரஸில் வீட்டு வன்முறை உதவி எண்களுக்கான அழைப்புகள் 30% அதிகரித்துள்ளன, மேலும் ரியோ டி ஜெனிரோவில், வீட்டு வன்முறை வழக்குகள் 50% அதிகரித்துள்ளன. எகிப்து முதல் இந்தியா வரை பல இடங்களில் உடல் ரீதியான வன்முறையால் இறக்கும் பெண்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது.

3. கொவிட் 19 காலத்தில் துஷ்பிரயோகத்திற்கு பதிலளிப்பது குறித்த வளங்களுக்கு. https://www.anglicancommunion.org/media/4115112/2007da-covid-19-churches.en.pdf

கவனமாக மாறுத்தரம் அளிக்கவும் வேண்டிய இயலுமையை அவர்களுக்கு வழங்குவதையும் இலக்காக கொண்டுள்ளது.

துன்பப்படுபவர்களுக்கு இரக்கத்துடன் பதிலளிக்கவும், நடைமுறை மற்றும் ஆவிக்குரிய ஆதரவு மூலம் அவர்களின் குணப்படுத்துதலுக்கு உதவும் வகையில் துஷ்பிரயோகத்தின் பரவலையும் அதன் தீவிரத்தன்மையையும் அடையாளம் காண்டுகொள்ள நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகிக்கொண்டிருப்போருக்காகவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அயராது உழைக்கும் சிறப்பு சேவைகளுக்காகவும் நாம் ஜெபிக்கவும், மேலும் இந்த சேவைகளுக்கு அரசாங்கம் போதுமான நிதியுதவியை வழங்க வேண்டும் என்று, மனு அளிக்க வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். அத்தோடு, துஷ்பிரயோகம் செய்பவர்கள் உட்பட தேவையோடிருப்பவர்களுக்கு உதவிட நாம் விழிப்புடன் தயாராக இருப்போமாக.

## அனைத்து மனிதர்களின் பெறுமதியினையும் குறித்த கடவுளின் பார்வை

**எல்லா மனிதர்களும் கடவுளின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளனர், எனவே, கடவுளின் பார்வையில் அவர்களுக்கு ஒரே வகையான கண்ணியமும் பெறுமதியும் உண்டு என்பதை வேதாகமம் அதன் ஆரம்ப அத்தியாயத்திலேயே உறுதிப்படுத்துகிறது**.

பின்பு தேவன்: *"நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக, ...ஆளக்கடவர்கள்" என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.* ஆதியாகமம் 1:26-27.[4]

ஒருவரையொருவர் மதித்து, கௌரவிப்பதும், ஒருவருக்கொருவர் நல்வாழ்வை ஊக்குவிப்பதும், ஆதரிப்பதும் அனைத்து விசுவாசிகளினதும் கட்டாய பொறுப்பாகும்.

*"சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள், கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்."* 12:10.[5] என்பதாக ரோமருக்கு பவுல் கூறுகின்றார்.

4. ஆதியாகமம் 5:2-3, அப்போஸ்தலர் 17:25-26, யாக்கோபு 3:9 பகுதிகளை பார்க்கவும்

5. ரோமர் 15:1-2, கலாத்தியர் 6:2, கொலோசெயர் 3:12-13 பகுதிகளை பார்க்கவும்

கிறிஸ்துவுக்குள், சமூக அந்தஸ்து, செல்வம், பாலினம் அல்லது இனம் ஆகியவற்றின் அடிப்படையில் எந்த பாரபட்சமோ அல்லது பாகுபாடோ இருக்கக்கூடாது. பவுல் இதனை பரவலாக மேற்கோள் காண்பிக்கும் வசனத்தில் தெளிவாக இவ்வாறு கூறுகிறார்: "*நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.*" கலாத்தியர் 3:26-28.[6]

நாம் "*தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க*" அழைக்கப்படுகிறோம் (எபேசியர் 5:21), மேலும் பரிசுத்த ஆவியின் வல்லமை நமக்கு இருப்பதால், இந்த உயர்தர உறவுகள் நமக்கு சாத்தியமானவையே.[7] நாம் விட்டுவிடவேண்டிய விடயங்களில் அடங்கும் கோபம், மூர்க்கம், இழிவான மொழி மற்றும் தீய நோக்கு ஆகியவற்றுக்கு பதிலாக, நாம் இரக்கம், தயவு, பணிவு, சாந்தம் மற்றும் பொறுமை ஆகியவற்றை அணிந்து கொள்ள வேண்டும் (கொலோசெயர் 3:5-10).

குடும்பத்திற்கான கடவுளின் நோக்கம் ஒடுக்குமுறையிலிருந்து சமாதானமும் பாதுகாப்பும் என்று வேதாகமம் நமக்கு கூறுகின்றது. ஏசாயா ஒரு நகரத்தை பற்றி இப்படியாக பேசினார், "*உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள் உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய், கொடுமைக்குத் தூ ரமாவாய், பயமில்லாதிருப்பாய் திகிலுக்குத் தூரமாவாய், அது உன்னை அணுகுவதில்லை.*" 54:13-14.

திருமணங்களில் அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்படும் ஒரு பகுதி, நமது எல்லா உறவுகளிலும் நாம் தேடும் சிறந்த அன்பை இப்படியாக விபரிக்கின்றது: "*அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, அன்புக்குப் பொறாமையில்லை, அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது.*" (1 கொரிந்தியர் 13:4-8).

---

6. யாக்கோபு 2:1-9 இனை பார்க்கவும்

7. கலாத்தியர் 5:22-26, கொலோசெயர் 3:8 பகுதிகளை பார்க்கவும்

நாம் சமாதானமான மற்றும் கருணையுள்ள உறவுகளுக்குள்ளாக வாழ வேண்டும் என கடவுள் விரும்புகிறார் என்பது தெளிவாகிறது. விசுவாசம் நம்மை வன்முறையாளர்களாக அல்ல, அன்பானவர்களாக மாற்ற வேண்டும்: மென்மையானவர்களாகவேயன்றி துஷ்பிரயோகம் செய்பவர்களாக அல்ல.

"*அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்*" ரோமர் 12:5.

## ஆரோக்கியமான திருமணங்கள்

**இல்லத்தில் நல்லிணக்கம் பேணுவது என்பது அனைவரினதும் பொறுப்பாகும். மனைவிகளை பற்றி குறிப்பிடும்போது பயன்படுத்தப்படும் "*ஹுபோடாசோ*" *(hupotasso)* என்ற கிரேக்க வார்த்தை பொதுவாக "*கீழ்ப்படிதல்*" என்று மொழிபெயர்க்கப்பட்டாலும் (கொலோசெயர் 3:18 ஐ பார்க்கவும்), இது புதிய ஏற்பாட்டிலும் பிற சமகால இலக்கியங்களிலும் பல்வேறு அர்த்தங்களை கொண்டுள்ளது.**

இந்த வார்த்தையானது, ஒருவருக்கொருவர் கட்டுப்படல், விசுவாசமாக இருத்தல், ஒத்திசைந்து செல்லுதல் அல்லது அடையாளப்படுத்தல், ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்புடன் செயற்படல், ஒருவருக்கொருவர் கடமைகளை நிறைவேற்றல் அல்லது மற்றொருவருடனான அர்த்தமுள்ள உறவை குறிக்கலாம். இந்த கொள்கைகள் ஒரு திருமணத்தை பெரிதும் வளமுள்ளதாக்கும்.

"*கீழ்ப்படிதல்*" என்பதை ஒருவர் எவ்வாறு புரிந்துகொண்டாலும், வேதாகமம் மனைவியின் கீழ்ப்படிதலை பற்றி குறிப்பிடும் போதெல்லாம், துணையின் மீதான துஷ்பிரயோகத்தை தடுப்பதை நோக்கமாக கொண்ட ஒரு தெளிவான உத்தரவு எப்போதும் அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை கவனத்தில்கொள்ள வேண்டும்: எபேசியரில், பவுல் புருஷர்களுக்கு "*அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும், தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்*" (5:28-29) என்று அறிவுறுத்துகிறார்.[8]

"*புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்*" என்னும் இந்த கூற்றானது, கட்டுப்பாடு அல்லது துஷ்பிரயோகத்திற்கான அடித்தளத்தை வழங்காமல், நெருக்கம் மற்றும் கரிசனையின் உறவை குறிக்கின்றது

8. அதேபோல, கொலோசெயர் 3:18-19 மற்றும் 1 பேதுரு 3:7

(எபேசியர் 5:23 ஐ பார்க்கவும்). இங்கு பயன்படுத்தப்படும் *"தலை"* என்பதற்கான கிரேக்க வார்த்தை *"கெ.ஃபாலே" (kephale)* என்பதாகும், இதன் அர்த்தம் மூலாதாரம் அல்லது *வழிநடத்துபவர்* என்பதாகும். இந்த வார்த்தை சேவை செய்வதையும் பாதுகாப்பதையும் குறிக்கிறது. சரீரத்திற்குள் அவயவங்கள் ஒன்றுக்கொன்று சார்ந்திருத்தல் மற்றும் பரஸ்பர ஆதரவை குறிக்கவும் இது வேறு இடங்களில் பயன்படுத்தப்படுகிறது.[9] பவுல் *"தலை" (head)* என்னும் வார்த்தையை அதன் வாசகர்கள் ஒரு ஆட்சியாளர் என்னும் அர்த்தத்தில் புரிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தால், அவர் பிரதான தூதர் அல்லது பிரதான எதிராளி போன்ற சொற்களில் காணப்படுவதுபோல, *"ஆர்ச்" (ache)* என்ற கிரேக்க வார்த்தையை பயன்படுத்தியிருப்பார். *"உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்"* என்று கூறியதன் மூலம், இயேசு தம் சீஷர்கள் ஒருவர் மேல் ஒருவர் ஆளுகை செய்தல் அல்லது ஆதிக்கம் செலுத்துவதற்கு எதிராக எச்சரிக்கின்றார்.[10]

கிறிஸ்து, தலையாக மற்றும் பரலோக மணவாளனாக இருந்து, திருச்சபையை தனது மணவாட்டியாக அதன் முழுத்திறனை வளர்ப்பதற்கு உதவுவதன் மூலம், இக்கருப்பொருளானது ஒரு புதிய கண்ணோட்டத்தை பெறுகிறது. அதேபோல், ஒரு உண்மையான அன்பான கணவன் தனது மனைவியானவள் கிறிஸ்துவிற்கு சேவை செய்வதற்கு முழுமையாக ஆயத்தப்படுத்தப்பட்ட ஒரு முழுமைபெற்றவளாக இருப்பதற்கு உதவுகிறான்.[11]

ஒரு துஷ்பிரயோகமான திருமண உறவானது (An abusive spousal relationship), கிறிஸ்து திருச்சபையின் மீது வைத்திருக்கும் அன்பை ஒருபோதும் பிரதிபலிக்க முடியாது. கடவுள் தம்மை சீயோனின் கணவர்[12] என்று குறிப்பிடுகிறார், அவள் ஒருபோதும் ஒடுக்குமுறையையோ பயத்தையோ அனுபவிக்க மாட்டாள் என்று உறுதியளிக்கிறார். அவரது இந்த கரிசனையின் சித்தரிப்பானது, பெண்கள் நிராகரிக்கப்படும், உடைந்த மனித உறவுகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது.

*"உன் சிருஷ்டிகரே உன் நாயகர், சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம் இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வபூமியின் தேவன் என்னப்படுவார். கைவிடப்பட்டு மனம்நொந்தவளான ஸ்திரீயைப்போலவும், இளம்பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட*

---

9. 1 கொரிந்தியர் 12:21 மற்றும் எபேசியர் 4:15-26 பகுதிகளை பார்க்கவும்

10. மாற்கு 10:42-44

11. எபேசியர் 5:25-27

12. எரேமியா 3:14

*மனைவியைப்போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார்"* (ஏசாயா 54:5-6).

வேதாகமமானது கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் அவமானப்படுத்தாமல், தீங்கு செய்யாமல், அல்லது குறைவாக நடத்தாமல், மரியாதையுடன் நடத்த வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

பரிசுத்த ஆவியானவரின் கனியானது துஷ்பிரயோகத்திற்கு முற்றிலும் எதிரானது: அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலாத்தியர் 5:22-23).

## பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகத்தை தடுத்தல்

**வேதாகத்தில் உள்ள தீர்க்கதரிசிகள் கடவுளின் குரலை கேட்டு, அவருடைய செய்தியை பயமின்றி அறிவித்தனர். அவர்கள் தங்களை சுற்றியுள்ள உலகத்தின் தீமையான காரியங்களுக்காக துக்கப்படவும், ஊக்கமான ஜெபம் மற்றும் ஆழமான பிரதிபலிப்பின் மூலம் கடவுளுக்கு முன்பாக கொண்டுவரவும் அவரால் வழிநடத்தப்பட்டனர்.** அவர்கள் ஆண்களையும், பெண்களையும் தங்கள் மனப்பான்மையை ஆராயும்படி அறிவுறுத்தினார்கள் மேலும் அவர்கள் தங்கள் வழிகளை மாற்றிக்கொள்ளும்படி அவர்களை சவாலுக்குட்படுத்தினர். அவர்கள் பெரும்பாலும் பிரபலமற்றவர்களாக இருந்தபோதிலும், கடவுளின் செய்தியினை அறிவிப்பதில் அவர்கள் உறுதியுடனும் உண்மையுடனும் இருந்தனர்.

இன்றைய கிறிஸ்தவ தலைவர்களுக்கும் இந்த மாதிரியானது பொருந்துகிறது. சமூகத்தின் நிலையை பகுத்தறிய வேண்டியது கட்டாயமாகவுள்ளது. அதன் பாவத்தன்மையை ஒப்புக்கொண்டு, அவருடைய தீர்க்கதரிசன குரல் மற்றும் வழிநடத்துதலுக்காக கடவுளை நோக்கிப்பார்க்கும்போது, ஜெபத்திலும் வேதாகம படிப்பிலும் நம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை என்பது ஒரு வேதனையான உண்மையாகும், பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை என்பது நாம் பேச விரும்பாத ஒன்றாகும். கிறிஸ்தவர்கள் மத்தியில் இதுபோன்ற காரியங்கள் நடக்க முடியாது என்றும் அதிலும் கிறிஸ்தவ இல்லங்களிளோ அல்லது திருச்சபையிலோ நடக்கவே கூடாது என்றும் நாம் சிந்திக்க விரும்புகின்றோம். ஆனால் ஈக்குவடோர் மற்றும் பெருவில் 2013 இல் நடத்தப்பட்ட ஒரு ஆய்வானது,

சுவிசேஷ கிறிஸ்தவ பின்னணியை கொண்ட வயது வந்தவர்களில் 70%-மானோர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏதேனும் ஒரு வகையான குடும்ப துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை காண்பித்தது.[13] இதேபோல், ஐக்கிய இராஜ்யத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், திருச்சபைகளில் நேர்காணல் செய்யப்பட்டவர்களில் 42% பேர் தங்கள் உறவுகளுக்குள் ஏதேனும் ஒரு வகையான துஷ்பிரயோகத்தை அனுபவித்ததாக கண்டறியப்பட்டுள்ளது, பெரும்பாலும் இது நீண்ட காலம் நடந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[14] இந்த கடினமான உண்மைகள் இப்படிப்பட்ட பாவமான செயல்கள் திருச்சபையிலும், சமூகத்திலும் பெரிதான அளவில் புறக்கணிக்கப்படுகின்றன அல்லது பொறுத்துக்கொள்ளப்படுகின்றன அல்லது சில சமயங்களில் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன என்பதை ஒப்புக்கொள்ள நம்மை நிர்பந்திக்கின்றன.[15]

உலகெங்கிலும் உள்ள பெண்கள் குடும்ப வன்முறையானது ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது என்று தொடர்ச்சியாக தெரிவிக்கின்றார்கள்.

குழந்தை பருவத்தில் முறையற்ற பாலியல் உறவு, துஷ்பிரயோகம் மற்றும் பெற்றோர் தங்கள் குழந்தைகளை பாலியல் அல்லது தொழிலாளர் அடிமைத்தனத்திற்காக குழந்தைகளை கடத்தி செல்வதற்கு அனுமதிப்பது போன்ற பிரச்சினைகள் மிகவும் அருவருப்பான விடயங்கள் என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இவை மிகவும் தீவிரமான பிரச்சினைகள் என்பதால், இதில் உள்ள ஆபத்துகளை பற்றிதிருச்சபைகள் பேசவேண்டியது கட்டாயமாகும்.[16]

பெரும்பாலும், திருச்சபை மற்றும் அதன் தலைவர்கள் துஷ்பிரயோகத்தின் தீவிரத்தையோ அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் அது ஏற்படுத்தும் ஆழமான மற்றும் நீடித்த

---

13. இந்த ஆராய்ச்சியை 2027 சுவிசேஷ கிறிஸ்தவர்களிடையே, பாஸ் ஒய் எஸ்பெரான்சா, கம்யூனிடாட் மற்றும் ரீஸ்டோர்ட் என்னும் நிறுவனங்கள் நடத்தியது. பெருவில் 60% சுவிசேஷ கிறிஸ்தவ பெண்களும் 40% சுவிசேஷ கிறிஸ்தவ ஆண்களும் சிறார்களாக இருந்தபோது பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானதாகக் கூறியுள்ளனர். ஈக்வடோரில், இந்த புள்ளிவிவரங்கள் முறையே 40% மற்றும் 20% ஆகும். அர்ஜென்டினாவில், இது முறையே 30% மற்றும் 20% ஆகும்.

14. ரிசோர்ட் நிறுவனத்தினால் 2018-ல் இந்த ஆய்வு நடாத்தப்பட்டது https://www.restored.uk.org/resources /in-chruches-too-church-responses-to-domestic-abuse/

15. விருது பெற்ற அவுஸ்திரேலிய பத்திரிகையாளரான ஜூலியா பெயர்ட், திருச்சபைக்குள் நடக்கும் துஷ்பிரயோகங்களை ஆராய்ந்து, பல திருச்சபை தலைவர்கள் குடும்ப வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்தின் அளவையும் தாக்கத்தையும் மிகவும் குறைத்து மதிப்பிடுவதாக தெரிவித்துள்ளார். https://www.nytimes.com/2018/05/10 opinion/chruches-can-no-longerhide-domestic-violence.html

16. ஜாய் வில்சன், "தவறான உறவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊழியம் செய்தல்": 201 ஐ பார்க்கவும்.

சரீர, சமூக, உள மற்றும் ஆவிக்குரிய பாதிப்பையோ முழுமையாக புரிந்து கொள்ளவில்லை. திருச்சபை சமூகமானது இவ்விடயத்தில் இதயமற்று செயற்படுகிறது என்று கூறுவதற்கில்லை, மாறாக ஒரு பெண் துஷ்பிரயோகம் செய்யப்படும்போது அதற்கு எவ்வாறு எதிர்வினையாற்றுவது எவ்வாறு என்பது பல கிறிஸ்தவர்களுக்கு தெரியவில்லை.[17]

இரக்கம் மற்றும் செயற்பாட்டிற்கான அழைப்பு என்பது எரேமியா போன்ற தீர்க்கதரிசிகளின் உரைகளில் மிகவும் தெளிவாக உள்ளது *"நீங்கள் ஏற்கனவே நியாயங்கேட்டு, பறிகொடுத்தவனை ஒடுக்குகிறவனுடைய கைக்குத் தப்புவியுங்கள்"* 21:12.[18]

வேதாகமம் என்ன கூறுகின்றது என்பதை கவனமாக நாம் ஆராய வேண்டிய தருணம் இதுவாகும். கிறிஸ்தவ சத்தியத்தை திரித்து பயன்படுத்துவதன் மூலமாக துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பல பெண்கள் மீண்டுமாக பாதிக்கப்பட்டுள்ளனர். பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்து வேதாகமம் என்ன கூறுகின்றது என்பது குறித்த தவறான கருத்துக்களை நாம் தெளிவுபடுத்த வேண்டும். பழைய மற்றும் புதிய கேள்விகளோடு வேதாகமத்தை அணுக வேண்டும்.

## திருச்சபை கலாச்சாரம் எவ்வாறு துஷ்பிரயோகத்தை ஊக்குவிக்கும் சூழலை உருவாக்குகிறது

**நாம் அனைவரும் பாவம் செய்து தேவமகிமை அற்றவர்களாக இருக்கின்றோம் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்-மறுபடியும் பிறந்தவர்கள் கூட இன்னமும் பாவத்தில் விழலாம் என்பதனையும் நாம் அறிந்துள்ளோம். நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய பாவத்தால் துக்கப்படுகையிலும், விசுவாசிகள் இன்னும் சரியானதற்கும் தவறானதற்கும் இடையே தேர்வு செய்யும் சுதந்திரத்தை கொண்டுள்ளனர்.**

வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் குறித்ததான வேதாகமத்தின் கண்டித்தலை குறித்து நாம் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். சரீரப்பிரகாரமாக தாக்குவது, வன்முறை, கற்பழிப்பு, வேதாகமம் ஏற்காத

17. துஷ்பிரயோகத்தை அனுபவிக்கும் ஆண்கள் பெரும்பாலும் நம்பப்படுவதிலும் ஆதரவைப் பெறுவதிலும் தனித்துவமான சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்பதையும் நாம் அங்கீகரிக்க வேண்டும். துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களில் சுமார் 85-90% பேர் பெண்கள் என்றாலும், ஆண்களும் பாதிக்கப்படுகின்றார்கள்-பொதுவாக சரீர ரீதியான வன்முறையை விட உணர்வு மற்றும் உளவியல் ரீதியான பாதிப்பை அனுபவிக்கின்றார்கள்.

18. எரேமியா 22:3, 15-18-ஐ பார்க்கவும்.

தகாத உறவு, ஒருவரை தாக்கும்படி பதுங்கி காத்திருப்பது, தவறாக குற்றஞ்சாட்டும்படி மற்றொருவரின் வார்த்தைகளை திரித்து கூறுவது, அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டல் ஆகியவற்றை பற்றி நூற்றுக்கும் மேற்பட்ட வேதாகம பகுதிகள் காணப்படுகின்றன.

கடவுளுடைய வார்த்தை வன்முறையையும் துஷ்பிரயோகத்தையும் கண்டிப்பதால், திருச்சபையானது இந்த சத்தியத்தை போதிப்பதில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும், ஆனால் வன்முறையின் கொடூரத்தன்மை மற்றும் பெண்களுக்கு ஏற்படும் விளைவுகள் குறித்து நாம் எத்தனை முறை பிரசங்கிக்கப்படுவதை கேட்கக்கூடியதாக உள்ளது?

துஷ்பிரயோக நடத்தைகளுக்கு எதிராக கடுமையான பின்விளைவுகள் ஏற்படும் என்று வேதாகமம் நமக்கு கூறுகின்றது-சண்டை அல்லது சச்சரவை மறைத்து வெளிப்புறமாக செய்யப்படும் மதரீதியிலான செயல்களை கடவுள் பொறுத்துக்கொள்ள மாட்டார், மேலும் *"பொல்லாத கரங்களை" (wicked fists)* உடையவர்களின் ஜெபங்களை அவர் கேட்கவும் மாட்டார்.[19]

ஒரு மூப்பர் அல்லது கண்காணியானவர் துஷ்பிரயோகம் செய்கின்றவராக காணப்படக்கூடாது என்று இளம் தீமோத்தேயு மற்றும் தீத்துவை பவுல் எச்சரிக்கிறார்.[20] கிங் ஜேம்ஸ் வேதாகம மொழிபெயர்ப்பானது தனிநபரானவர் *"தாக்குபவராக" (striker)* இருக்கக்கூடாது என்று கூறுகின்றது, அதே நேரத்தில் தற்கால மொழிபெயர்ப்புகள் பெரும்பாலும் *"வன்முறை" (violent)* என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன. ஆனால் மூல கிரேக்க மொழியின் நேரடி அர்த்தம் *"அடிப்பவர்" (one who hits)* என்பதாகவே குறிப்பிடுகிறது.

அத்தகைய நடத்தைக்கு எதிராக பவுல் எச்சரிக்கின்றார் என்றால், அது உண்மையிலேயே ஒரு பிரச்சனைக்குரிய விடயமாயிருந்திருக்க வேண்டும்-அவர் அதை கையாள்வதற்கு தயங்கவில்லை. அதேபோல், நாமும் அதே தைரியத்துடனும் தெளிவுடனும் அதை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

தலைமைத்துவத்திற்கான மற்றொரு தகுதியானது நல்லுறவுகளை கொண்ட ஒரு குடும்பத்தை கொண்டிருத்தலாகும். பவுல் இதை *"தெளிந்த புத்தி உள்ளவன், தன்னடக்கமுள்ளவன், ஒழுங்கானவன், விருந்தோம்புகிறவன், போதிக்கத் திறமையுள்ளவன், குடிக்கு அடிமையாகாதவன், வன்முறையற்றவன் ஆனால் சாந்தகுணமுள்ளவன்"*

19. ஏசாயா 58:4, 1 பேதுரு 3:7 பகுதிகளை பார்க்கவும்

20. 1 தீமோத்தேயு 3:3, தீத்து 1:7

போன்ற வார்த்தைகளை பயன்படுத்துவன் மூலமாக குறிப்பிடுகிறார். (1 தீமோத்தேயு 3:2-4). வீட்டில் காணப்படக்கூடிய எந்தவொரு வாய்மொழி மூலமான அல்லது பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகமும் எந்த ஒரு நபரையும் கடவுளின் வீட்டில் பொறுப்புகளை ஏற்பதற்கு தகுதியற்றதாக்குகிறது.

திருமணத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ பாலியல் விடயங்களில் ஒருவர், மற்றொரு நபரை தவறாகவோ அல்லது சாதகமாகவோ பயன்படுத்தவோ கூடாது என்று பவுல் தெளிவாக கூறுகின்றார், *"நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து: இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும்"* 1 தெசலோனிக்கேயர் 4:3-6

கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் தங்கள் சரீரங்களை பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று வேதாகமம் கற்பிக்கும் அதே வேளையில் (1 கொரிந்தியர் 7:3-5), இந்த பகிர்வு ஒருபோதும் வற்புறுத்தலையோ அல்லது கடுமையையோ உள்ளடக்கியதாக இருக்கக்கூடாது. அது எப்போதும் அன்பு, மரியாதை மற்றும் பரிசுத்தத்ததுடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.

## துஷ்பிரயோகத்திற்கான திருச்சபையின் மாறுத்தரம்

***"கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் விடுவிப்பது"*** **(சங்கீதம் 72:12) கடவுளுடைய மக்களின் பொறுப்பு என வேதாகமம் கூறுகின்றது.**

ஒரு திருச்சபை குடும்பத்தில் துஷ்பிரயோகம் நடக்கிறது என்று நமக்கு தெரிந்தாலும், நாம் ஏன் அடிக்கடி அதை புறக்கணிக்கிறோம்? பாதிக்கப்படுபவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும், தேவைப்படும்போது உதவி செய்வது, உணர்வுசார் ரீதியிலான மற்றும் ஆவிக்குரிய ஆதரவை வழங்குவது, தங்குமிடம், உணவு, குழந்தை பராமரிப்பு, ஆலோசனை, ஜெபம் மற்றும் அன்பு என நம்மால் முடிந்த உதவிகளை அவர்களுக்கு வழங்குவதும் நமது கடமையாகும்.[21]

21. பல வசனங்களுக்குள், உபாகமம் 15:7-11, ஏசாயா 58:6-10, எசேக்கியேல் 18:5-9, மத்தேயு 25:31-46 ஆகியவற்றை பார்க்கவும்.

ஒரு பெண் கிறிஸ்துவை பின்பற்றி துன்பப்பட வேண்டும், அப்பொழுது அவளது கணவன் அவளது துன்பத்தின் மூலம் மனந்திரும்ப முடியும் என்பது ஒரு தவறான கருத்தாகும்.[22] தங்கள் விசுவாசத்தின் நிமித்தம் பாடுகளை அனுபவிப்பவர்களை வேதாகமம் பாராட்டுகின்றது என்பது உண்மைதான். இருப்பினும், 1 பேதுருவில் பாடுகளை பற்றிய நன்கு அறியப்பட்ட பகுதி, துன்புறுத்தலின்போது கிறிஸ்தவர்களாக பாடுகளை அனுபவிப்பவர்களுக்காக பேசப்படுகின்றது.[23]

வேதாகமம் விசுவாசிகள் தங்களை தாங்களே துன்புறுத்தலுக்கு அனுமதிப்பதை அங்கீகரிக்கவில்லை. நமக்கு இரட்சிப்பை கொண்டுவருவதற்காக இயேசு தனது ஜீவனை கொடுக்க ஒப்புக்கொண்டாலும், மற்றைய தருணங்களில் அவர் வன்முறை, அவதூறு, ஏமாற்றுதல், மற்றும் வாய்மொழி மற்றும் உணர்வுசார் ரீதியான துஷ்பிரயோகம் ஆகியவற்றிற்கு எதிராக தன்னை தற்காத்து கொண்டார்.[24]

ஒரு மனைவியின் கனிவான மற்றும் கருணையுள்ள மனப்பான்மை அவளுடைய கணவன் கிறிஸ்துவிடம் வருவதற்கு செல்வாக் செலுத்தக்கூடும், ஆனால் தொடர்ச்சியான அவனது துஷ்பிரயோகத்தை சகித்துக்கொள்வது, சம்பந்தப்பட்ட அனைவரினதும் ஆவிக்குரிய வாழ்க்கையை பாதிக்கிறதாக காணப்படும்.

மற்றொரு தீங்கு விளைவிக்கும் போதனை என்னவென்றால், துஷ்பிரயோகம் செய்யும் நபருடன் உறவில் இருக்கும் ஒரு பெண் வன்முறையை *"சரிசெய்வதற்கு" (solve)* கடினமாக ஜெபிக்க வேண்டும், ஏனெனில் திருமணத்தை விட்டு வெளியேறுவது "ஒரே சரீரம்" என்னும் பிணைப்பை அவள் உடைப்பதாக கருதப்படும் என்பதாகும்.[25] போதகர்கள் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பை விட, திருமண உறவின் பிணைப்பை அதிகம் மதிப்பதாக தெரிகிறது. அத்துடன் இந்த மனப்பான்மை, வன்முறைக்கு அந்த பெண் பங்காளியாயிருக்கக்கூடும் என்பதையும் குறிக்கிறது.

பிரச்சனைக்குரிய திருமணங்கள் சீர்பெற வேண்டும் என்பதனை நாம் அனைவரும் மனதார விரும்புகிறோம், ஆனால் துஷ்பிரயோகம் செய்பவர் தன்னை மாற்றிக்கொள்ள மறுக்கும்போது, துஷ்பிரயோகத்தினால்

---

22. முன்னர் குறிப்பிட்டது போல, இந்த கட்டுரையில் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களில் 90% பேர் பெண்கள் என்று ஆராய்ச்சி குறிப்பிடுவதால், துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கினவர்களை விட, துஷ்பிரயோகத்திற்கு ஆளான பெண்களையே முதன்மையாக குறிப்பிடுகிறோம்.

23. 1 பேதுரு 2:18-19 மற்றும் 4:14-16

24. லூக்கா 4:28-30, மாற்கு 3:22-30, யோவான் 8:48-59, 10:39 ஆகிய வசனங்களை பார்க்கவும்.

25. திருமணமானது ஒரு ஆணையும் பெண்ணையும் ஒரே சரீரமாக பரிபூரண ஐக்கியத்தில் பிணைப்பதற்காக கொடுக்கப்பட்டது (ஆதியாகமம் 2:24, எபேசியர் 5:31).

பாதிக்கப்பட்டவர் தனது உயிரையும் தனது பிள்ளைகளின் உயிரையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். எந்தவொரு துஷ்பிரயோக உறவிலும், துஷ்பிரயோகம் முடிவுக்கு வருவதே சிறந்த முடிவாயிருக்கும். போதகர்கள் மற்றும் அக்கறையுள்ள சமூகமும் தாங்கள் தொடர்ந்து எடுக்கும் முயற்சிகள் துஷ்பிரயோகத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு தவறினால், பிரிவு, தலையீடு அல்லது சட்ட நடவடிக்கை போன்ற பிற நடவடிக்கைகளை கருத்தில் கொள்வது அவசியமாகிறது. பெரும்பாலும், பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பையும் நல்வாழ்க்கையையும் விட திருமணத்தை காப்பாற்றுவதற்கு திருச்சபைகள் முன்னுரிமை அளிக்கின்றன.

சில கணவன்மார் தங்கள் வன்முறை நடத்தையை நியாயப்படுத்தவோ அல்லது ஒரு பெண் வன்முறைக்கு பங்களித்திருக்கலாம் என்று எண்ணும்படியாகவோ அல்லது ஒரு பெண் ஏதாவது தவறு செய்து துஷ்பிரயோகத்திற்கு பங்களித்திருக்கலாம் என்று எண்ணும்படியாகவோ வேதாகமத்தின் கீழ்ப்படிதல் என்னும் போதனையை தவறாக பயன்படுத்துவது பொதுவான விடயமாக உள்ளது.[26] இந்த தவறான போதனை பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை அல்லது சில சமயங்களில், திருச்சபை தலைவர்களின் மௌனமான அல்லது வெளிப்படையான ஒப்புதலுடன் தொடர அனுமதிக்கப்படுகின்றது.[27]

## துஷ்பிரயோகம் செய்பவர்களை நாம் எவ்வாறு கையாளுவது?

**துஷ்பிரயோகம் செய்தவருக்கு வேறுவிதமான ஆதரவும் வழங்கப்பட வேண்டும், ஆனால் அவர்களின் செயல்களுக்கு அவர்கள் பொறுப்பு கூற வேண்டும்.** பெரும்பாலும் துஷ்பிரயோகம் செய்பவர் பாதிக்கப்பட்டவரை விட பேச்சாற்றல் மிக்கவராகவும், மற்றவரை தன்பக்கம் ஈர்க்கக்கூடியவராகவும் இருக்கிறார். இதன் காரணமாக, சபை பாதிக்கப்பட்டவரை நம்பாமல், கடுமையான தீர்ப்புகளை வழங்கி குற்றமிழைத்தவருக்கே ஆதரவு அளிக்கிறது.

26. 2013 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில் (பக்கம் 09 இல் உள்ள அடிக்குறிப்பை பார்க்கவும்) பதிலளித்தவர்களில் 30% பேர், மனைவிமார் தனது கணவருக்கு கீழ்ப்படியாததால் தான் தாக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளனர். ஈக்வடோரில் 20% சுவிசேஷ கிறிஸ்தவர்களும், பெரு மற்றும் அர்ஜென்டினாவில் 30% மானவர்களும், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர் வன்முறையை தூண்டுவதற்காக ஏதாவது தவறு செய்திருக்க வேண்டும் என்று நினைக்கின்றனர்.

27. மத்தேயு 18:15-17-ல், இயேசு ஒருவர் உங்களுக்கு எதிராக தவறு செய்தால் என்ன செய்ய வேண்டும் என்று தமது சீஷர்களிடம் கூறுகிறார். துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்கள் பொதுவாக இதன் முதல் படியை நிறைவேற்றியிருப்பார்கள், எனவே திருச்சபை இதில் தலையிட வேண்டும் ஆனால் துஷ்பிரயோகம் முடிவிற்கு வரவில்லை என்றால், “துஷ்பிரயோகம் செய்பவர்” நீக்கப்பட வேண்டும் என்பது இயேசுவின் போதனையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

பாவம் செய்யும் ஒரு நபரை விசுவாச சமூகம் திருத்த வேண்டும் என்று புதிய ஏற்பாடு கற்பிக்கிறது: ஒருவர் தனது சொந்த குடும்பத்திற்கு எதிராக செய்யும் வன்முறை உண்மையில் ஒரு கடுமையான பாவமாகும்.

*"மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி, பாவஞ்செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்."* (1 தீமோத்தேயு 5:20)[28] குற்றமிழைத்தவர் திருச்சபையின் கண்டனத்திற்கு உள்ளாக வேண்டும் என்று வேதாகமம் குறிப்பாக கூறுகிறது. [29]

துஷ்பிரயோகம் பற்றி அறிந்தவர்கள் எதுவும் தவறாக இல்லை என்பது போல் தொடர்ந்து செயற்படக்கூடாது. மௌனமாயிருப்பது ஒருவரின் மறைமுக ஒப்புதல் என்பதாக தவறாக புரிந்து கொள்ளக்கூடும்.[30] நீண்ட காலமாக, திருச்சபைகள் துஷ்பிரயோகத்தை கையாள்வதை விட தங்கள் நற்பெயரை பாதுகாப்பதற்கோ அல்லது ஒரு போதகரின் நற்பெயரை பாதுகாப்பதற்கோ முன்னுரிமை அளிப்பதையோ விரும்பி, துஷ்பிரயோகத்தினை புறக்கணித்தும் அல்லது மூடிமறைத்தும் வந்திருக்கின்றன. ஆனால் மௌனமாயிருத்தல், இரகசியம் காத்தல் மற்றும் தவறுகளை மூடி மறைத்தல் என்பன துஷ்பிரயோகத்தை கையாளும் கடவுளுடைய வழிகள் அல்ல.

துஷ்பிரயோகம் செய்பவருக்கு வழிகாட்டுதல், மேற்பார்வை மற்றும் மேய்ப்பத்துவ பராமரிப்பு என்பவை வழங்கப்படலாம் என்றாலும், துஷ்பிரயோக நடத்தை விசுவாச வாழ்க்கைக்கு பொருந்தாது என்பது அவருக்கு தெளிவாக உணர்த்தப்பட வேண்டும். இத்தகைய குற்றமானது எந்த வகையிலும் பொறுத்துக்கொள்ளப்பட முடியாதது. இதுபோன்ற துஷ்பிரயோக பிரச்சினைகள் எழும்போது, கிறிஸ்தவர்கள் கடவுளின் வார்த்தைக்கு கீழ்ப்படியும் விதமாக பதிலளிக்க அழைக்கப்படுகிறார்கள்.

துஷ்பிரயோகம் செய்பவர் தனது நடத்தையின் விளைவுகளை எதிர்கொள்ள நாம் அனுமதிக்க வேண்டும்.[31] அவருக்கு குறைந்த தண்டனை பெற்றுத்தரவோ, துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கான சிகிச்சை குழுவிலிருந்து அல்லது நீதிமன்றம் உத்தரவிட்ட ஆலோசனை வகுப்புகளிலிருந்து விலக்கு அளிக்கவோ எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படக்கூடாது. நியாயமான மற்றும் சட்டரீதியான விளைவுகள்

---

28. மத்தேயு 18:15-17, யாக்கோபு 5:19-20 வசனங்களை பார்க்கவும்.

29. 1 கொரிந்தியர் 5:1-13, 2 தெசலோனிக்கேயர் 3:6, 14-15, நீதிமொழிகள் 3:31, 24:1-2 போன்ற வசனங்களை பார்க்கவும்.

30. கிறிஸ்தவர்களை கொல்வதற்கு பவுல் தாமே அமைதலான ஒப்புதல் அளித்திருந்தார், அப்போஸ்தலர் 7:58 ஐ பார்க்கவும்.

31. சங்கீதம் 7:16, "அவன் தீவினை அவன் சிரசின்மேல் திரும்பும், அவன் கொடுமை அவன் உச்சந்தலையின்மேல் இறங்கும்." என்று கூறுகின்றது.

அவற்றின் பணியை செய்வதற்கு நாம் அனுமதிக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.[32]

## மனந்திரும்புதலை குறித்து என்ன கூறலாம்?

**துஷ்பிரயோகம் செய்தவர் உண்மையாகவே மனந்திரும்பியுள்ளதாக தோற்றமளிக்கலாம் என்பதில் திருச்சபை அவதானமாயிருக்க வேண்டும். தன்னால் ஏற்படுத்தப்பட்ட தீங்கிற்காக அவர் வருத்தப்படுவதை விட, தனது பாவமான நடத்தை வெளிப்படுவதை பற்றி அவர் இன்னும் அதிகமாக வருத்தப்படலாம். உண்மையான மனந்திரும்புதல் என்பது வெறுமனே அதற்காக மனவருத்தப்படுவதற்கு சமமானது அல்ல (எபிரெயர் 12:17).**

வன்முறை வெடித்த பின்பதாக பொதுவாக ஒரு மனவருத்த காலம் ஏற்படும். இதை உண்மையான மனந்திரும்புதலுடன் குழப்பிக்கொள்ளக்கூடாது. துஷ்பிரயோகம் பெரும்பாலும் ஒரு சுழற்சி முறையை பின்பற்றுகிறது: முதலில் துஷ்பிரயோகம் நடைபெறும், அதை தொடர்ந்து ஆரம்ப இணக்க காலகட்டம் வருகிறது (இந்த காலகட்டத்தில் தவறிழைத்தவர் தனக்கான மன்னிப்பை கோருகின்றார்) பின்னர், மற்றொரு துஷ்பிரயோகம் நிகழும் வரை பதற்றம் அதிகரித்துச்செல்கின்றது.

உண்மையான மனந்திரும்புதல் என்பது அந்த துஷ்பிரயோக நடத்தையானது மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதை உள்ளடக்கியது. இதன் பொருள், ஒரு பொறுப்புக்கூறல் குழுவில் இணைவது, துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கான சிகிச்சை குழுவில் இணைவது, தனிப்பட்ட ஆலோசனை அமர்வுகளில் கலந்துகொள்வது அல்லது ஒரு காலபட்டத்திற்கு சுயசிந்தனை (பிரதிபலிப்பு) மற்றும் தனிமைப்படுத்தலிலும் தன்னை உட்படுத்திக்கொள்வது என்பதாகும். உண்மையான மனந்திரும்புதல் என்பது மாற்றப்பட்ட நடத்தையை உள்ளடக்கியது. அதை பாதிக்கப்பட்டவரும் அல்லது குழந்தைகளும் ஒரு உண்மையான வித்தியாசத்தை தெளிவாகக் கண்டு உணரக்கூடிய மாற்றத்தை குறிக்கிறது-ஒரு காலத்தில் கிறிஸ்தவர்களை துன்புறுத்திய சவுல் அப்போஸ்தலன் பவுலாக மாற்றப்பட்டதைப் போலவே, துஷ்பிரயோகம் செய்யும் நபரும் கடவுளின் கிருபையின் மூலம் மாற்றப்பட்ட மனப்பான்மைகளையும் சீர்திருத்தப்பட்ட நடத்தையையும் உருவாக்க முடியும். மீட்பிற்கான பயணம் பெரும்பாலும் கடினமாகவே இருக்கும், இதற்கு கடவுளி பரிசுத்தவான்களின் ஜெபத்துடனான

32. 1 கொரிந்தியர் 5:5, 1 தீமோத்தேயு 1:20ஐ பார்க்கவும்.

தொடர்ச்சியான ஆதரவும், நிலையான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடும் தேவை.

## மன்னிப்பு மற்றும் ஒப்புரவாகுதல்

**வேதாகமத்தில் மன்னிப்பை பற்றி அநேக விடயங்கள் எழுதப்பட்டுள்ளது, மேலும் துஷ்பிரயோகம் செய்யும் ஒரு கணவர் வருத்தம் தெரிவித்தவுடன் அவரை மன்னிக்கும்படி போதகர்கள் உடனடியாக (அத்தருணத்திலேயே) மனைவியை வற்புறுத்துவது பெரும்பாலும் நிகழ்கிறது. ஆனால் அது பரிசுத்த ஆவியானவரின் செயலாகும்.** துஷ்பிரயோகம் செய்தவரை பொறுத்தவரை, அது உண்மையான மனந்திரும்புதலின் தொடர்ச்சியாக இருத்தல் வேண்டும். துஷ்பிரயோகத்திற்கு உள்ளானவரை பொறுத்தவரை, மன்னிப்பு என்பது குணப்படுத்தும் செயல்முறையின் ஒரு பகுதியாகும். இதற்கு நேரமும், ஒருவேளை இடைவெளியும் தேவைப்படலாம்.

பாதிக்கப்பட்டவருக்கு தனது சொந்த பாதுகாப்பு மற்றும் தனது பிள்ளைகளின் பாதுகாப்பு குறித்து கவலைப்படுவதற்கான முழு உரிமையும் உண்டு. உடனடியாக மன்னிப்பதற்கு அவளை நிர்பந்திப்பது அவளை மீண்டும் ஒரு ஆபத்தான சூழ்நிலைக்கு தள்ளக்கூடும், இது அவளையும் அவளுடைய பிள்ளைகளையும் தொடர்ச்சியான துஷ்பிரயோகத்திற்கோ அல்லது மரணத்திற்கோ கூட ஆளாக்கக்கூடும்.[33] பாதிக்கப்பட்டவருக்கு மன்னிக்க தயாராவதற்கு கணிசமான அளவு காலம் தேவைப்படலாம், மேலும் அந்த செயன்முறையை ஒருபோதும் அவசரப்படுத்தப்பட்ட ஒன்றாகவோ அல்லது நிர்பந்திக்கப்பட்டதாகவோ இருக்கக்கூடாது. இவ்வளவு ஆழமாக தமது நம்பிக்கைக்கு துரோகம் மற்றும் தமது உயிரிற்கு தீங்கு விளைவித்த பிறகு அந்த குடும்ப உறுப்பினரின் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் பாதுகாப்பு உணர்வை மீட்டெடுப்பதற்கும் அதிக காலம் ஆகலாம். கடவுளினால் சரியான நேரத்தில், பொருத்தமான முறையில் மன்னிப்பை கொண்டு வர முடியும். அங்கு மன்னிப்பின் செயலானது காணப்படினும் குடும்பமானது எல்லா சந்தர்ப்பத்திலுமே மீண்டும் ஒன்றிணைக்கப்படலாம் என்பது அதன் அர்த்தமல்ல.

வேதாகமம் இருதயம் மற்றும் சரீர ரீதியான குணப்படுத்துதலை பற்றி அனேக விடயங்களை பேசுகிறது, மேலும் உடைக்கப்பட்டு நொறுங்குண்ட ஆவி மற்றும் அதன் புதுப்பித்தல் உட்பட

33. மரணத்தை பற்றி பேசுவது மிகவும் ஆச்சரியமான ஒன்றாக தோன்றலாம், ஆனால் உலகெங்கிலும் உள்ள புள்ளிவிவரங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான பெண்கள் தங்கள் துணைவர் அல்லது முன்னாள் துணைவரின் கைகளால் மரிக்கின்றார்கள் என்பதை காட்டுகின்றன.

எல்லாவற்றிற்கும் ஒரு காலமும் நேரமும் இருக்கிறது என்பதை நமக்கு அது நினைவூட்டுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு, கொடூரமான செயல்களினால் துன்புற்றவர்களுக்குக்கூட, ஆழ்ந்த குணப்படுத்துதலை கொண்டுவர கடவுள் சர்வ வல்லவராயிருக்கிறார். பாலியல் வன்கொடுமை, கடத்தல் அல்லது போர்க்கால துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு திருச்சபையிடமிருந்து விசேட பராமரிப்பு, பரிவு மற்றும் நடைமுறை உதவி தேவை. பாதிக்கப்பட்டவர்கள் மறுசீரமைப்பிற்காக கடவுளின் தெய்வீக தொடுதலின் தேவையை அடையாளம் காண்பது போல, துஷ்பிரயோகம் செய்தவர்களும் தங்களுக்கான மனந்திரும்புதலின் தேவையை அடையாளம் காண வேண்டும்.

துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவருக்கும், பாதிப்பை ஏற்படுத்தியவருக்கும் இடையே ஒப்புரவாகுதல் ஏற்பட வேண்டுமானால், அதற்கான அடித்தளம் மிகவும் கவனமாக அமைக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவருக்கு உதவுபவர் அவருடைய குணப்படுத்தும் பயணத்தில் எவ்வளவு உதவ விரும்பினாலும் குணப்படுத்துவதை காலவரையறைக்குள் கொண்டுவர முடியாது. பல ஆண்டுகளாக நிகழ்ந்த துஷ்பிரயோகத்தை பொதுவாக ஒரு சில மாதங்களில் அகற்றிவிட முடியாது என்பதை பராமரிப்பாளர்கள் உணர வேண்டும். கடவுளின் குணப்படுத்துதல் மற்றும் மீட்பின் தொடுதல் உடனடியான ஆவிக்குரிய புதுப்பித்தலை கொண்டுவரக்கூடும் என்றாலும், துஷ்பிரயோகத்தின் வடுக்கள் நீங்க பெரும்பாலும் பல ஆண்டுகளாகும்.

துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டவர் தனது நடத்தைக்காக மனந்திரும்பவும், உதவியினை நாடவும், தனது துஷ்பிரயோகமான வழிகளை மாற்றிக்கொள்ளவும் நேரம் காலம் தேவைப்படும். மறுபடியும் இணையும் செயற்பாடு என்பது மிக அவசரமாக நடந்தால், துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டவர் தான் செய்தது உண்மையில் ஒரு தீவிரமான குற்றம் அல்ல என்ற முடிவிற்கு வரக்கூடும். பாதிக்கப்பட்டவர் ஜெபம் செய்யவும், சரீரம் மற்றும் ஆவியின் முழுமையை நோக்கிய பயணத்தின் அடுத்த கட்டத்தின் பல அம்சங்கள் மற்றும் தாக்கங்களை பற்றி சிந்திக்கவும் நேரம் தேவை. இருசாராரும் துஷ்பிரயோகம் மீண்டும் நடக்காமல் இருப்பதையும், பாதிக்கப்பட்டவர் மீண்டும் பாதிக்கப்படாமல் இருப்பதையும் எவ்வாறு உறுதி செய்வது என்பது குறித்து இருதரப்பினரும் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டும்.

மறுபடியும் இணையும் செயற்பாட்டில், விசுவாச சமூகம் உதவியாக இருக்கலாம், இருப்பினும், பெண் விருப்பப்பட்டாலும் கூட அங்கத்தவர்கள் அவசரப்படவோ அல்லது செயன்முறையை கட்டாயப்படுத்தவோ கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். துஷ்பிரயோகத்திற்கு

ஆளான ஒரு பெண்ணும்[34] அவளுடைய பிள்ளைகளும் தங்களை ஆபத்தில் உட்படுத்திக்கொள்ளக்கூடும் என்பதை போதகர்களும் நண்பர்களும் உணர வேண்டும், மேலும் பாதுகாப்பு மற்றும் குணப்படுத்துதல் தொடர்பான பிரச்சினைகளை கண்காணிக்க திருச்சபையானது விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதையும் உணர வேண்டும்.

துஷ்பிரயோகம் செய்பவர்களும் கூட காயப்பட்டுள்ளார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அவை சில சமயங்களில் அவர்களின் குழந்தை பருவத்தின் வேதனையான அனுபவங்களாலும், நிச்சயமாக அவனின் அல்லது அவளின் நடத்தையினாலும் ஏற்பட்டிருக்கலாம். இதற்கும் குணப்படுத்துதல் தேவைப்படுகிறது. குற்றவாளி தனக்கு மிக அன்பானவர்களுக்கும் நெருக்கமானவர்களுக்கும், விசுவாச சமூகத்திற்கும் ஏற்படுத்திய தீங்கினை சரிசெய்யும் முயற்சிகளில் அன்பான கிறிஸ்தவ உதவி அவசியம். பெரும்பாலும் கடவுளின் செயற்பாட்டு வழிகள் மனித எதிர்பார்ப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை என்றாலும், பாவத்தை கண்டிக்க வேண்டிய ஒரு கடமை திருச்சபைக்கு உள்ளது. பாதிக்கப்பட்டவர் மற்றும் குற்றவாளி இருவரையும் ஜெபம், அன்பு மற்றும் நடைமுறை ஆதரவுடன் சூழ்ந்துகொள்வதன் மூலம் இந்த நடைமுறையின் ஒரு அங்கமாக விசுவாச சமூகம் முக்கிய பங்கு வகிக்கிறது. கடவுளின் அன்பானது கருணை மற்றும் ஊக்கமளிக்கும் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படுவதால், அது குணப்படுத்தும் மற்றும் மறுசீரமைப்பிற்கான சாத்தியத்தை அதிகப்படுத்துகிறது.

## குடும்பங்களுக்கான நம்பிக்கை

**கிறிஸ்தவர்கள் சில சமயங்களில் குடும்பத்தை பரிபூரணமான ஒன்றாக மிகைப்படுத்தி பார்க்கின்றார்கள். வேதாகமமானது, குடும்பங்கள் மிகவும் கடினமான நிலைக்குள் சென்றாலும் கூட அவற்றுக்கூடாக கடவுள் செய்யும் காரியங்களை பற்றி கூறுகிறது. ஆதாம், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தாவீது ஆகியோரின் குடும்பங்களை பற்றி சிந்தித்து பார்க்கும்போது, கவலைக்கிடமான உண்மைகளை மறுக்கவோ மறைக்கவோ வேதாகம எழுத்துக்களில் எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதை புரிந்துகொள்ள முடியும்.** வேதாகம காலங்களைப்போலவே, துஷ்பிரயோகத்திற்கு விசுவாச எல்லைகள் கிடையாது, அது விசுவாச சமூகத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் இடம்பெறும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

34. துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களில் பெரும்பாலோர், 80% க்கும் அதிகமானோர் பெண்கள். பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களில் 90% பேர் பெண்கள் (UNwomen.org என்னும் இணையத்தளத்தை பார்வையிடவும்)

மகிழ்ச்சியான கிறிஸ்தவ குடும்பமாக இருப்பதைப்போல பாசாங்கு செய்வதானது துஷ்பிரயோகத்தின் யதார்த்தத்தை மேலும் குழப்பமடைய செய்து, மோசமாக்குகிறது. பிரச்சினையை மறுப்பது, அதனை குறைத்து மதிப்பிடுவது அல்லது புறக்கணிப்பதானது பரிசுத்த ஆவியானவர் செயற்படாதபடிக்கு தடுக்கிறது. சிக்கலான குடும்பங்களில் குணமடைவதற்கான நம்பிக்கையை வேதாகமம் வழங்கினாலும், அதற்கு நேர்மை, விசுவாசம், கடின உழைப்பு மற்றும் கிறிஸ்தவ சமூகத்தின் ஆதரவும் தேவை.

## சரீர மற்றும் உணர்வுசார் ரீதியாக குடும்பத்திற்குள் நிகழக்கூடிய துஷ்பிரயோகம் தொடர்பில் ஆரோக்கியமான கிறிஸ்தவ பதில்கள்.

**அனைத்து திருச்சபை தலைவர்களும் தாங்கள் பணி செய்ய விரும்பும் சமூகங்கள் மற்றும் திருச்சபை குடும்பங்களுக்குள்ளும் இடையே உள்ள குடும்ப துஷ்பிரயோகமானது எவ்வளவு பரவலாக உள்ளது என்பதை ஒப்புக்கொள்ளுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்**.

துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, ஜெபம், நடைமுறை உதவி மற்றும் தொழில்முறை ஆலோசனையை பெறுதல் என தங்களால் முடிந்த அனைத்து வழியிலும் ஆதரவளிக்க வேண்டுமென்பதை அனைத்து கிறிஸ்தவர்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

துஷ்பிரயோகம் குறித்த சில திருச்சபை போதனைகள் உதவியற்றவை என்பதையும், அவை துஷ்பிரயோகம் செய்பவர்களை பாதுகாக்கக்கூடும் என்பதையும் திருச்சபை தலைவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

குடும்ப வன்முறை கடவுளுடைய இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதை தெளிவுபடுத்தவும், ஆரோக்கியமான முன்மாதிரியை உருவாக்கவும், பரஸ்பர மரியாதை மற்றும் ஒருவருக்கொருவர் கடவுள் கொடுத்த திறமைகளை மதிக்கும் அடிப்படையில் ஆரோக்கியமான, தெய்வீக உறவுகளையும் அவர்கள் மாதிரியாக காண்பிக்கவும் திருச்சபை தலைவர்கள் குடும்ப துஷ்பிரயோகங்களை பற்றி பேசவும், பிரசங்கிக்கவும் வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

திருச்சபையின் நற்பெயரையோ அல்லது தலைவர்களின் நற்பெயரையோ பாதுகாக்கும் நோக்கில் வழக்குகளை மறைக்காமல், திருச்சபையானது

துஷ்பிரயோகத்தை குறித்து பேச வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

பிள்ளைகள், முதியவர்கள் அல்லது பெண்களை விட சக்தி வாய்ந்த ஆண் குரல்களை முக்கியத்துவப்படுத்தாமல், அனைத்து திருச்சபைகளும் தங்கள் மந்தையாகிய சபையை சமமாக நடத்த வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்ப வன்முறையை தடுக்க, சமூகத்தில் உள்ள சட்ட மற்றும் தொழில்முறை சேவைகளுடனும், மேய்ப்பத்துவ ஆதரவுகளுடனும் இணைந்து செயல்பட வேண்டும் என்று போதகர்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

*இந்த சிற்றேடு முதலில் வெளியிடப்பட்டு இருபது ஆண்டுகளுக்கு பிறகும், குடும்பத்திற்குள் நிகழக்கூடிய துஷ்பிரயோகத்தின் பரவல் இன்றும் சற்றும் குறைவடையாமலே உள்ளது என்பது இச்சிற்றேட்டின் எழுத்தாளர்களுக்கு வருத்தமளிக்கிறது.*

*எல்லா தேசங்களிலும் உள்ள திருச்சபைகளினதும் இருதயங்களும் எல்லா சூழ்நிலைகளிலும் குடும்பங்களில் நிகழக்கூடிய துஷ்பிரயோகத்திற்கு மறுப்பு தெரிவிக்க வேண்டும், அமைதியாக இருப்பதற்கு மறுப்பு தெரிவிக்க வேண்டும், துஷ்பிரயோகத்தை மறைப்பதற்கு மறுப்பு தெரிவிக்க வேண்டும், எந்த குற்றமும் செய்யாமல் வன்முறையால் காயமடைந்து, தங்கள் சுய-மரியாதையை இழந்தவர்களுக்கு ஆதரவாக நிற்க வேண்டும் என தூண்டப்படுவதற்கு நாம் ஜெபிக்கின்றோம்.*

## வளங்களின் பக்கம்

**குடும்பத்திற்குள் நிகழக்கூடிய துஷ்பிரயோகத்திற்கு கிறிஸ்தவர்களின் பதில்களை பற்றி மேலும் அறிவதற்கு இந்த வளங்கள் உங்களுக்கு உதவும்.**

பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் மதிப்பு மற்றும் ஆரோக்கியமான உறவுகள் மற்றும் நடத்தைக்கான முன்னோக்கி செல்லும் வழி பற்றிய ஒரு விரிவான அறிக்கை *"அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் அழைப்பு 2019" (the Call to All Christians 2019)* என்பதில் விளக்கப்பட்டுள்ளது. இது 17 மொழிகளில் கிடைக்கிறது, இதை நீங்கள் இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்யலாம். www.riseinstrenght.net/download-the-call.

நடாலி கொலின்ஸ், ***Out of Control: Couples, Conflict and the Capacity for Change*** *(கட்டுப்பாடற்ற நிலை: தம்பதிகள், முரண்பாடுகள் மற்றும் மாற்றத்திற்கான திறன்),* SPCK, 2019 (மின்-புத்தகமாகவும் கிடைக்கின்றது)

எலைன் ஸ்டோர்கி (Elaine Storkey), ***Scars Across Humanity: Understanding and overcoming violence against women*** *(மனிதகுலம் முழுவதற்குமான வடுக்கள்: பெண்களுக்கு எதிரான வன்முறையை புரிந்துகொள்வதும் அதனை மேற்கொள்வதும்),* SPCK, 2015

ஜோய் வில்சன், ***Ministering to Victims of Incest: A Model for Church Responses*** *(தகாத உறவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊழியம் செய்தல்: திருச்சபை பதில்களுக்கான ஒரு மாதிரி),* சூலோன் பதிப்பகம் (Xulonpress), 2017

மீட்டெடுக்கப்பட்ட உறவுகள் எனும் ஸ்தாபனத்தின் www.restored-uk.org என்னும் இணையத்தளத்தில் ***Ending Domestic Abuse: A Pack for Churches*** *(குடும்பத்திற்குள் நிகழக்கூடிய துஷ்பிரயோகத்தினை முடிவிற்கு கொண்டுவரல்: திருச்சபைகளுக்கான ஒரு தொகுப்பு)* என்ற வளப்பொதியை திருச்சபைகளுக்காக கொடுக்கப்பட்டுள்ளது. இது ஆங்கிலம், ஸ்பானிஷ், பிரஞ்சு, இந்தி, அரபு, போலிஷ், ஸ்வீடிஷ் மற்றும் ரஷ்ய மொழிகளில் கிடைக்கிறது.

**இந்த சிற்றேட்டின் பிரதிகளை நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் அல்லது மொழிபெயர்க்க விரும்பினால் அல்லது பகிர்ந்து கொள்ள உங்களிடம் வளங்கள் இருந்தால், குறிப்பாக ஆங்கிலம் அல்லாத மொழிகளில் காணப்படுமானால், தயவுசெய்து CNEDA@worldea.org என்னும் மின்னஞ்சல் முகவரியில் எம்மை தொடர்பு கொள்ளவும்.**

## உறவுகளில் பரஸ்பர மரியாதை பற்றிய பிரதிபலிப்புகள்

இந்த சிற்றேடானது உங்களுக்கு பயனுள்ளதாக இருந்திருக்கும் என்று நம்புகிறோம். உங்கள் அடுத்த படிகள் எதுவாக இருக்கும்?

**வேதாகமத்தில்** பல துஷ்பிரயோகம் பற்றிய பல சம்பவங்கள் காணப்படுகின்றன, அவைகள் அரிதாகவே முன்னிலைப்படுத்தப்படுகின்றன-கடவுளின் மக்கள் இப்படிப்பட்ட பாவங்களை செய்துள்ளனர் என்பதனை ஏற்றுக்கொள்வது வேதனையானது. ஆனால் இந்த சம்பவங்கள் வேதாகமத்தில் உள்ளன, மேலும் நாம் எதை இவைகளுக்கூடாக கற்றுக்கொள்ள வேண்டும் என கடவுள் விரும்புகிறார் என்பதை நம்மை நாமே கட்டாயமாக கேட்டுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்:

ஆதியாகமம் 16-ல் உள்ள ஆகாரின் கதையை பாருங்கள். இதை நாம் ஆகாரின் துன்பத்தின் பார்வையில் அரிதாகவே வாசித்திருப்போம், ஆனால் சாராய் மற்றும் ஆபிராமால் அவள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டாள். இந்த பகுதியை வாசித்து, அதனை உங்களுக்கு ஒரு புதிய வழியில் காண்பிக்கும்படி கடவுளிடம் கேளுங்கள். கர்த்தருடைய தூதன் ஆகாருக்கு எவ்வாறு பதிலளிக்கிறார்? இன்றைய நாட்களின் ஆகார்களுக்கு நாம் எவ்வாறு பதிலளிக்க வேண்டும்?

யூதாவின் மருமகள் தாமார் (ஆதியாகமம் 38) மற்றும் லேவியனின் மறுமனையாட்டி (நியாயாதிபதிகள் 19) ஆகியோரின் கதைகளையும் நீங்கள் பார்க்கலாம். மேலும், அப்சலோமின் சகோதரி தாமாரின் கதையையும் (2 சாமுவேல் 13) நீங்கள் பார்க்கலாம்.

அவை வாசிப்பதற்கு கடினமான பகுதிகள் ஆகும்.

இந்த கதைகளினூடாக கடவுள் எமக்கு என்ன கூறுகின்றார்?

**செயற்பாடுகள்**: மாற்றத்திற்கு செயற்பாடுகள் மிகவும் அவசியமானவை.

தயவு செய்து ஜெபத்தோடு கூட பதில்களின் பக்கத்தை (பக்கங்கள் 20-21)ஐ பாருங்கள், கடவுள் உங்களையும் மற்றும் உங்கள் திருச்சபையை அல்லது அமைப்பை எதனை கருத்தில் கொள்ளும்படி கூறுகிறார்? சொல்கிறார் என்பதை கவனியுங்கள். இந்த துஷ்பிரயோக கதையை கூட்டாண்மை, பரஸ்பர சமர்ப்பிப்பு மற்றும் அன்பின் கதையாக மாற்றுவதற்கு கடவுள் நமக்கு உதவுகிறவராக இருக்கிறார், ஆனால் நாங்கள் அதனை நமக்கு சாதகமாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

**ஜெபியுங்கள்**: மற்றவர்களின் துன்பங்களை “காணவும்”, ஞானமான புரிதலுடன் மற்றவர்களுடன் சேர்ந்து பயணிக்கவும், கடவுள் உங்களுக்கு அதிக உணர்திறனை அளிப்பதற்காக ஜெபியுங்கள். மேலும், துஷ்பிரயோகம் போன்ற தார்மீக பிரச்சினைகளை கையாளும்போது திருச்சபை நேர்மையுடன் சரியானதை செய்வதற்கும் ஜெபியுங்கள்.

# குடும்பத்திற்குள் நிகழக்கூடிய துஷ்பிரயோகத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான உறவுகள் குறித்தான வேதாகம கண்ணோட்டம்



Christian Network
TO END DOMESTIC ABUSE

WOMEN'S COMMISSION
WEA

Rs. 200.00

CTS Publishing
Colombo Theological Seminary
*Resources to the Church for the Transformation of Nations*

Find us on: facebook

ISBN 978-624-5570-24-9

9 786245 570249